# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2292/17 - 2022 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2022.08.09

2292/17 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: PUT/LND/01/01/17.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2015/WS210.

காணி எடுத்தல் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் விபரங்களையுடைய காணி தொடர்பாக 2021, மே மாதம் 04 ஆந் திகதிய 2226/27 ஆம் இலக்க, இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பகுதி III இல் காணியின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலானது திருத்தப்பட்டு பின்வருமாறு வெளியிடப்படுகிறது.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாட் சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவின் புத்தளம் பற்று சிறு பிரிவின், இலக்கம் 616, சேனைக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் சேனைக்குடியுருப்பு கிராமத்தில் புத்தளம் பிரிவிலக்கம் 3இல் (புத்தளம் நகர எல்லைக்குள்) அமைந்துள்ள புத்தளம் மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட மு.பி.பு.க.சி 410112 ஆம் இலக்க 2020.02.12 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் காணப்படும் பின்வரும் காணிப்பகுதி.

01. **துண்டு இல. 124**

காணியின் பெயர்: முடலிய செனாய் வத்த; விபரம்: தோட்டம், தென்னை பயிர்கள் காணப்படு கிறது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஐ. என். எம். மொஹமட் காசிம் மரிக்கார்; விஸ்தீரணம்: 1.2197 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம்



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, புத்தளம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். ஏ. வை. ஆர். ஜயதிலக,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்.
2022, ஓகத்து 03.

EOG 08 - 0067